MELUR MUNICIPALITY

Minutes of the Council Meeting held on 27.09.2024 (Urgent)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| | **27.09.2024 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்டம்**<br>**முன்னிலை: திரு.உ.முகமதுயாசின், நகர்மன்றத்தலைவர்** | |
| 568 | **மன்றப்பொருள் எண்.1**<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட குத்தகை தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திரு.A.சந்திரன், என்பவர் வழக்கு W.P.(MD).No.21650/2024ல் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். இந்நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் இந்நகராட்சி சார்பாக அரசு தலைமை வழக்கறிஞர் (Additional Advocate General-III) திரு.**வீரகதிரவன் அவர்கள்**, ஆஜராகியதற்கும், வழக்கறிஞர் கட்டணம் ரூ.85000/- (**எண்பத்து ஐந்து ஆயிரம் மட்டும்**) வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.1857/2024/அ2** | அனுமதிக்கப்பட்டது. |
| 569 | **மன்றப்பொருள் எண்.2**<br><br>சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திரு.V.ஸ்ரீதர் த/பெ வீரணன் , திருச்சி மெயின்ரோடு, மேலூர் என்பவரால் இந்நகராட்சி ஆணையாளர் அவர்களை 5வது பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட W.P.(MD)No1890/2023 வழக்கில் திரு.சாதிக்ராஜா அரசு வழக்கறிஞர் இந்நகராட்சியின் சார்பாக ஆஜராகவும், வழக்கறிஞர் கட்டணம் ரூ.9500/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.1984/2024/அ2** | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 570 | **<u>மன்றப்பொருள் எண்.3</u>**<br><br>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.15 நாள் 20.01.2022இன்படி மேலூர் நகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்த தினசரி சந்தையினை அப்புறப்படுத்தி புதிய தினசரி சந்தை கட்டும் பணி ரூ.787.00இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டது. நகர்மன்ற தீர்மான எண்.491 நாள்.24.06.2024 ல் அனுமதி அளித்துள்ளதன்படி, இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண்.286/2024/அ2 நாள்.19.08.2024ன்படி, புதிய தினசரி சந்தையில் மாதவாடகை இனங்கள் மற்றும் திறந்தவெளிக்கடைகளில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் இனங்களுக்கு ஒப்படைக்கும்நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி 04.09.2024ஆம் தேதி கோரப்பட்டது.<br>அரசு ஆணை எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 06.08.2024ன்படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண்.286/2024/அ2-2 நாள்.09.09.2024ன்படி தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் ஆண்டு குத்தகை ஏல இனத்திற்கு மறு பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி 25.09.2024ல் கோரப்பட்டதில் ஏல இனத்திற்கு பொதுஏலம் வைப்பு தொகை செலுத்தி பொது ஏலத்தில் கலந்து கொள்ள எவரும் முன்வரவில்லை. மேற்படி இனத்திற்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மேற்காணும் இனத்திற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளாக, கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br><br><table><tr><td>வ. எண்.</td><td>பெயர் மற்றும் முகவரி</td><td>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</td></tr><tr><td>1.</td><td>திரு.A.ராஜேந்திரன்,<br>1, பல்லவராயன்பட்டி மெயின் ரோடு,<br>மேலூர்.</td><td>ரூ.50,65,300/-<br>(ரூபாய் ஐம்பது இலட்சத்து அறுபத்து ஐந்து ஆயிரத்து முந்நூறு மட்டும்)</td></tr><tr><td>2.</td><td>திரு.M.லத்தீப்,<br>நாளங்காடி தெரு,<br>நாகம்மாள்கோவில் தெரு,<br>மேலூர்.</td><td>ரூ.46,00,500/-<br>(ரூபாய் நாற்பத்து ஆறு இலட்சத்து ஐநூறு மட்டும்)</td></tr></table><br>மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.A.ராஜேந்திரன் 1, பல்லவராயன்பட்டி மெயின்ரோடு, மேலூர் என்பவர் உயர்ந்தபட்சமாக ரூ.5065300/- (ரூபாய் ஐம்பது இலட்சத்து அறுபத்து ஐந்து ஆயிரத்து முந்நூறு மட்டும்)தொகைக்கு கோரியுள்ளது. குத்தகை இனங்களின் பொதுஏல நிபந்தனைகள் மற்றும் சிறப்பு | அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td>கட்டுபாடுகளுக்குட்பட்டு 01.10.2024 முதல் 31.03.2027 முடிய உள்ள காலத்திற்குரிய குத்தகை உரிமம் குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.A.ராஜேந்திரன், என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.50,65,300/- (2024-2025ம் ஆண்டிற்குரிய உரிமத்தொகை ரூ.44,06,417/- விட) ரூ.6,58,883/- கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி ரூ.5037857/- விட ரூ.27,443/- கூடுதலாகவும் உள்ளது மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். (ந.க.எண்.286/2024/அ2)</td><td></td></tr>
<tr><td>571</td><td><u>மன்றப்பொருள் எண்.4</u><br>பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு சொந்தமான மலம்பட்டி உரக்கிடங்கில் தினசரி சேகரமாகும் உலர்கழிவுகளை குவியலாக்கும் பணியினையும், ஏற்கனவே கொட்டி வைக்கப்பட்டுள்ள உலர்கழிவுகளை குவியலாக்கம் பணியினையும் மேற்கொண்டு வந்த நிலையில் இதற்கான அனுமதிபெற்ற செலவினத்தொகை ரூ.5.00இலட்சம் முடிவுற்றதால் மேற்குறிப்பிட்ட உரக்கிடங்கு பணியினை தொடர்ந்து செயல்படுத்திட கூடுதல் செலவினமாக செப்டம்பர் 2024 முதல் மார்ச் 2025 முடிய உள்ள காலத்திற்கு ஜே.சி.பி. இயந்திரம் மூலம் பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.5.00இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>572</td><td><u>மன்றப்பொருள் எண்.5</u><br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 27 வரையிலான பகுதிகளில், பெரிய கால்வாய் மற்றும் ஆற்றுக்கால் தூர்வாரிட மற்றும் தூர்வாரப்பட்ட மண்களை ஜே.சி.பி இயந்திரம் கொண்டு அகற்றும் பணிக்கு 26.09.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டுள்ளன.<br><table><tr><td>வ.எண்.</td><td>நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி</td><td>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</td></tr><tr><td>1</td><td>K.பதுருன்நிஷா ஒர்க் காண்ட்ராக்டர், மேலூர் (ஒரு மணி நேரத்திற்கு)</td><td>1090.00</td></tr><tr><td>2</td><td>DREAMS கன்ஸ்ட்ரக்சன் எர்த் ஒர்க்ஸ் & ஆட்டோ ஒர்க்ஸ் (ஒரு மணி நேரத்திற்கு)</td><td>1200.00</td></tr></table>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள K.பதுருன்நிஷா ஒர்க் காண்ட்ராக்டர், மேலூர் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்குவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>573</td><td><u>மன்றப்பொருள் எண்.6</u><br>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.15 நாள் 20.01.2022இன்படி மேலூர் நகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்த தினசரி சந்தையினை அப்புறப்படுத்தி புதிய தினசரி சந்தை கட்டும் பணி ரூ.787.00இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மேற்காணும் திட்டப்பணிக்கான நிதி ஒதுக்கீட்டில் ரூ.236.10இலட்சம் திட்டப்பணிக்கு இந்நகராட்சி பங்களிப்புத்தொகையினை பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. பொது நிதியிலிருந்து நகராட்சியின் பங்களிப்பு தொகையினை திட்ட பணிக்கு செலவினம் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அரசு ஆணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.2007, அரசு ஆணை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.09.2008 அரசு ஆணை எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.06.08.2024 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புறஉள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 , தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் திருத்திய விதிகள் 2023ன்படி புதிய தினசரி சந்தையில் உள்ள கீழ்க்காணும் விவரப்படியான இனத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 492 நாள்.24.06.2024ல் அனுமதி அளித்துள்ளதை தொடர்ந்து, பொதுஏலம் / ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், மாவட்ட அரசிதழில் பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் வெளியிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>ஏலம் கோரப்படும் இனங்கள்</th><th>எண்ணிக்கை</th></tr>
<tr><td>1</td><td>தினசரி சந்தையில் இரு சக்கர வாகன நிறுத்தத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்</td><td>1</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>
1) புதிதாக கட்டப்பட்டுள்ள தினசரிசந்தையில் உள்ள இரு சக்கர வாகன நிறுத்தத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் இனத்திற்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>
2) பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை மாவட்ட அரசிதழ் மற்றும் தினசரி நாளிதழில் வெளியிடவும்/தொடர் நடவடிக்கைகள் மற்றும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.286/2024/அ2</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>574</td><td><u>மன்றப்பொருள் எண்.7</u></td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25ல் கருத்தபுளியம்பட்டி கிராமம் வார்டு D, பிளாக் B, சர்வே எண்.8ல் உள்ள காந்திநகரில் சர்க்கார் புறம்போக்கு நிலத்தில் 49ஏர்ஸில் 11 செண்ட் பரப்பளவு இடத்தில் பொதுமக்களால் மயானமாக 60 ஆண்டுகளுக்கு மேலாகி உபயோகப்படுத்தப்பட்டு வரும் நிலையில், மேற்கண்ட சர்க்கார் புறம்போக்கு நிலத்தினில் உள்ள மயானத்தினை மராமத்துபணி செய்வதற்கும், மேற்படி இடத்தினை அரசு புறம்போக்கு என்பதை மயான வகைப்பாடாக மாற்றிட உரிய நடவடிக்கைகாக மேலூர் வருவாய் வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பி அடங்கலில் மாற்றம் செய்திட பரிந்துரை செய்யப்பட்டதை எதிர்த்து, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திரு.வெ.பாலகிருஷ்ணன், மேலூர் என்பவரால் இந்நகராட்சி ஆணையாளர் அவர்களை 5வது பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட W.P.(MD)No.22999/2024 வழக்கில் திரு.பாண்டியராஜன் வழக்கறிஞர் இந்நகராட்சியின் சார்பாக ஆஜராகவும், வழக்கறிஞர் கட்டணம் ரூ.9500/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம். | |
| 575 | **<u>மன்றப்பொருள் எண்.8</u>**<br><br>மேலூர் நகராட்சியில் 2022-23ம் ஆண்டிற்கான வருவாய்நிதி, குடிநீர் நிதி, கல்வி நிதி மூன்று நிதிகளுக்கும் ஆண்டு கணக்கு தயார்செய்ய Trial Balance, Income and Expenditure , Balance sheet ஆகியன குமாரபாளையம், Sanjay Solutions, நிறுவனத்தின் மூலம் தயார்செய்யப்பட்டதற்கும், உத்தேச செலவினம் ரூ.65000/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |